**ஆண் :** ஆஆ…ஹா…ஆஆ..
ஹா…ஆஆ….ஆஆ…..
இன்றைக்கு ஏன் இந்த ஆனந்தமே
இன்பத்தில் ஆடுது என் மனமே
கனவுகளின்…. சுயம்வரமோ
கண்திறந்தால்…. சுகம் வருமோ

**பெண் :** இன்றைக்கு ஏன் இந்த ஆனந்தமே
இன்பத்தில் ஆடுது என் மனமே

**ஆண் :** பூங்குயில் சொன்னது
காதலின் மந்திரம்
பூமகள் காதினிலே

**பெண் :** பூவினைத் தூவிய
பாயினில் பெண்மனம்
பூத்திடும் வேளையிலே

**ஆண் :** நாயகன் கைத்தொடவும்
வந்த நாணத்தை பெண் விடவும்
நாயகன் கைத்தொடவும்
வந்த நாணத்தை பெண் விடவும்

**பெண் :** மஞ்சத்திலே கொஞ்ச கொஞ்ச
**ஆண் :** மங்கை உடல் கெஞ்ச கெஞ்ச
**பெண் :** சுகங்கள் சுவைக்கும்
இரண்டு விழிகளில்

**பெண் :** இன்றைக்கு ஏன் இந்த ஆனந்தமே
இன்பத்தில் ஆடுது என் மனமே
கனவுகளின்…. சுயம்வரமோ
கண்திறந்தால்…. சுகம் வருமோ

**ஆண் :** இன்றைக்கு ஏன் இந்த ஆனந்தமே ..

**பெண் :** ……………………………………

**பெண் :** மாவிலைத்தோரணம்
ஆடிய காரணம்
தேவியின் திருமணமோ

**ஆண் :** ஆலிலையோ தொட
ஆளில்லையோ
அதில் ஆடிடும் என் மனமோ

**பெண் :** காதலின் பல்லவியோ
அதில் நான் அனுபல்லவியோ
காதலின் பல்லவியோ
அதில் நான் அனுபல்லவியோ

**ஆண் :** மஞ்சத்திலே ஏழு ஸ்வரம்
இன்பத்திலே நூறு வரம்
**பெண் :** மிதந்து மறந்து
மகிழ்ந்த நெஞ்சத்தில்

**ஆண் :** இன்றைக்கு ஏன் இந்த ஆனந்தமே
இன்பத்தில் ஆடுது என் மனமே
**பெண் :** கனவுகளின்…. சுயம்வரமோ
கண்திறந்தால்…. சுகம் வருமோ

**ஆண் :** இன்றைக்கு ஏன் இந்த ஆனந்தமே…